# தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு துணை முதலமைச்சர் 23.6.2009 அன்று பேரவையில் படித்து அளித்த அறிக்கை:

இவ்வாண்டில் பருவ மழை தாமதமாகியுள்ளதால் குறுவை நெல் சாகுபடிக்கு காவிரி நீர் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் டெல்டா மாவட்ட விவசாயிகளில் பலர் “பம்ப் செட்” மூலம் குறுவைச் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், ஆகிய டெல்டா மாவட்டங்களில் விவசாயத்திற்காகத் தற்போது பகலில் 6 மணி நேரமும் இரவில் 4 மணி நேரமும் வழங்கப்பட்டு வரும் மும்முனை மின்சாரத்தை குறுவை நெல் சாகுபடி தடையில்லாமல் நடைபெற உதவும் வகையில் இனி பகலில் 12 மணி நேரமும் இரவில் 4 மணி நேரமும் ஆக மொத்தம் 16 மணி நேரம் வழங்கப்படும் என்றும், இது இன்றுமுதல் நடைமுறைக்கு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.